[1979 பிப்ரவரி 19

(திரு. துரை முத்துசாமி எழுந்து நின்று கொண்டிருந்தார்..)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி சொல்லிக் கொண்டேயிருந்தால் திரு. துரை முத்துசாமி அவர்கள் பார்வை பேரவைத் தலைவரின் கண்ணுக்கு வராமல் கூட போய்விடக் கூடிய நிலைமை ஏற்படும்......

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இம்மாதிரி முடிவு எடுப்பது உண்மையிலேயே வேதனைக் குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. கேள்வி கேட்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. து. இராமசாமி : விவகாரம் பண்ணுகிறவர்களுக்குத் தான் சந்தர்ப்பம் கொடுப்பீர்கள் போல் இருக்கிறது. எப்போதோ ஒருமுறை நாங்கள் கேட்கிறோம். அப்படிக் கேட்கிற வர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாதா? முக்கியமான கேள்விகளுக்குத்தான் கை தூக்குகிறோம். இதுவரை நாங்கள் எத்தனை சப்ளிமென்டரி கேள்விகள் கேட்டிருக்கிறோம் என்று தயவு செய்து பாருங்கள்.

திரு. துரை முத்துசாமி : எதிர்க்கட்சி வரிசையில் தற்போது இருக்கின்ற ஒரே ஒரு தலைவர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர், உறுப்பினர் என்று பார்த்து கேள்வி நேரத்தில் வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. ஒரே ஒரு கேள்விக்கு 15 நிமிஷம் ஆகியிருக்கிறது. எப்படி பேரவைத் தலைவர் நேரத்தை அட்ஜஸ்ட் செய்ய முடியும்?

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களைக் கொடுக்க மறுப்பதாலும், கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்திய தாலும் எங்களுடைய வருத்தத்தையும், அதிருப்தியையும் தெரி விக்கிற முறையில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

கொல்லி மலைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்

* வினா எண். 82 திரு. கே. சௌந்தரராசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 பிப்ரவரி 19]

திருச்சி மாவட்டம், துறையூர் அருகில் உள்ள கொல்லி மலைப் பகுதியை சுற்றுலா மையமாக ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்போது இல்லை.

திரு. கே, சௌந்திரராசன் : திருச்சி மாவட்டத்தில் வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளைக் கவருகின்ற அளவுக்கு வசதி வாய்ப்பு இல்லாத காரணத்தால் வெளிநாட்டுப் பயணிகள் வந்து தங்குவதற்குரிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. துறையூருக்குப் பக்கத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதியை சுற்றுப் பயணிகளைக் கவரத்தக்க அளவுக்கு மாற்றியமைத்தால் திருச்சி மாவட்டம் வளர்ச்சி பெறுவதோடு கொல்லி மலையும் வளர்ச்சிபெற ஏதுவாக இருக்கும். கடந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பகுதியில் வந்து தங்கியிருந்தபோது அதை ஒரு சுற்றுலாப் பகுதியாக அபிவிருத்தி செய்தால் சுற்றுலாப் பயணிகளை அது ஈர்க்க முடியும் என்று சொன்ன கருத்தை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கொல்லி மலைப் பகுதியின் அடிவாரத்தில் இருந்த பல மரங்கள் கடந்த வெள்ளத்தின்போது விழுந்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. ஒரு அருவி மாத்திரம் இப்போது அங்கே இருக்கிறது. அதையும் அங்குகுடி தண்ணீர்த்திட்டத்திற்கும் வேறுதிட்டத்திற்கும் பயன்படுத்த பொதுப்பணித் துறை அணை கட்டும் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு அணை கட்டப்படுமானால் அதற்குப் பிறகு வேண்டுமானால் அதை ஒரு சுற்றுலா ஸ்தலமாக மாற்ற முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. இருப்பினும் அது வெளி நாட்டுப் பயணிகளைக் கவரும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : கம்ப இராமாயணம் இனிமையானது, சுவையானது என்று தமிழர்கள் போற்றுகிறார்கள். அத்தகைய கம்ப இராமாயணம் அரங்கேற்றப்பட்ட மாவட்டம் திருச்சி மாவட்டம். அந்த மாவட்டத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் கம்பன் அரங்கம் நினைவாலயம் அமைக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கம்பன் அரங்கமும், இல்லமும் உல்லாசப் பயணிகளைக் கவராது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.